அரசு பொதுத்தேர்வு - மார்ச் – 2024 - மேல்நிலை இரண்டாம் ஆண்டு.

வகுப்பு: XII பாடம்: உயிரியல் விலங்கியல்.

==========================================================================

(மாணவர்களின் பயன்பாட்டிற்கு மட்டும்)

| SECTION – 1 | | | | 8 x 1 = 8 | |
|---|---|---|---|---|---|
| Q. NO | A - TYPE | MARK | Q. NO | B - TYPE | MARK |
| 1 | அ) செர்டோலி செல்கள் | 1 | 1 | இ) கல்லீரல் | 1 |
| 2 | அ) உதவி பெறும் வாழ்க்கை | 1 | 2 | ஆ) உத்தரகாண்ட் | 1 |
| 3 | இ) மொழுக்கு ஈ | 1 | 3 | ஈ) ஹென்றி பாஸ்டியன் | 1 |
| 4 | ஈ) 21 | 1 | 4 | இ) மொழுக்கு ஈ | 1 |
| 5 | இ) கல்லீரல் | 1 | 5 | அ) செர்டோலி செல்கள் | 1 |
| 6 | ஈ) ஹென்றி பாஸ்டியன் | 1 | 6 | அ) உதவி பெறும் வாழ்க்கை | 1 |
| 7 | ஆ) உத்தரகாண்ட் | 1 | 7 | அ) SCID | 1 |
| 8 | அ) SCID | 1 | 8 | ஈ) 21 | 1 |

SECTION - 2

குறிப்பு: ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 2 Marks

| Q.NO | ANSWERS | MARKS |
|---|---|---|
| 9 | **மனித மரபணு திட்டத்தின் முக்கிய இலக்குகள்:**<br>1. மனித டி.என்.ஏவில் உள்ள அனைத்து மரபணுக்களையும் (ஏறத்தாழ 30,000) கண்டறிதல்.<br>2. மனித டி.என்.ஏவை உருவாக்கிய மூன்று பில்லியன்வேதி கார இணைகளின் வரிசையை தீர்மானித்தல்.<br>3. இந்த தகவல்களை தரவுதளங்களில் சேமித்தல்.<br>4. தரவுகளை ஆய்வு செய்வதற்கான கருவிகளை மேம்படுத்துதல்.<br>5. தொடர்புடைய தொழில்நுட்பங்களை தொழிற்சாலைகள் போன்ற பிற துறைகளுக்கு இடமாற்றுதல்.<br>6. இந்த திட்டத்தில் எழும் அறம், சட்டம் மற்றும் சமூக இடர்ப்பாடுகளைத் (ELSI) தெரிவித்தல். | ஏதேனும் இரண்டு<br>1<br>1<br>(Total- 2) |
| 10 | **குறுதிறன் (Oligopotency):**<br>1. தண்டு செல்கள், சில வகை செல்களாக மட்டும் வேறுபாடையும் திறன்.<br>2. **எடுத்துக்காட்டு:** லிம்ஃபாய்டு அல்லது மயலாய்டு தண்டு செல்கள் B மற்றும் T செல்களாகமட்டும் வேறுபாடடைதல், ஆனால் RBC யாக வேறுபாடடைவதில்லை. | 1<br>1<br>(Total- 2) |

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com



www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

| | | |
|---|---|---|
| 11 | **அண்ட செல்லின் அமைப்பு**<br><br> | **படம் 1**<br>**பாகங்கள் ஏதேனும் 4**<br>**1**<br>**(Total- 2)** |
| 12 | **தொழில்துறை ஆல்கஹால் என குறிப்பிடப்படுவது எது? ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறது?**<br>1. எத்தனால் "தொழில்துறை ஆல்கஹால்" என குறிப்பிடப்படுகிறது.<br>2. எதில் ஆல்கஹால் தொழிற்சாலை மற்றும் ஆய்வகங்களில் பயன்படுவதோடு, எரிபொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது. | **1**<br>**1**<br>**(Total- 2)** |
| 13 | **சமீர் (SAMEER):**<br>1. மத்திய மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் செயலி.<br>2. ஒவ்வொரு மணிக்கும் காற்றின் பண்புக் குறியீட்டை வெளியிடுகிறது. | **½**<br>**1 ½**<br>**(Total -2)** |
| 14 | **கருப்பைவாய்ப் புற்றுநோயை உருவாக்கும் காரணிகள்:**<br>1. பலருடன் பாலியல் தொடர்பு.<br>2. கருத்தடை மாத்திரைகளை நீண்ட நாட்களாகப் பயன்படுத்துதல். | **1**<br>**1**<br>**(Total -2)** |

**SECTION - 3**

**குறிப்பு: ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி. வினா எண் 19 க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.** **3 MARKS**

| Q.NO | ANSWERS | MARKS |
|---|---|---|
| 15 | **கோப்ரோலைட்டுகள் (Coprolites):**<br>1. விலங்குகளின் கடினமாக்கப்பட்ட மலப்பொருட்கள், கோப்ரோலைட்டுகள் (Coprolites) ஆகும்.<br>2. இந்த கோப்ரோலைட்டுகளை ஆய்வு செய்வதால் முந்தைய காலத்தில் வாழ்ந்த விலங்குகளின் உணவுப் பழக்கத்தினை அறிந்து கொள்ளலாம். | **1 ½**<br>**1 ½**<br>**(Total -3)** |
| 16 | **தாய்சேய் இணைப்புத்திசு ஒரு நாளமில்லாச் சுரப்பித் திசு:**<br>1. கர்ப்ப காலத்தில் தாய்சேய் இணைப்புத்திசு தற்காலிக நாளமில்லாச் சுரப்பியாகச் செயல்பட்டுகிறது.<br>2. 'மனித கோரியானிக் கொனடோடிரோபின் (hCG)',<br>3. மனித கோரியானிக் சொமட்டோமாம்மோடிரோபின் (hCS)' அல்லது 'மனித பிளாசன்டல் லாக்டோஜென் (hPL)', | **1**<br>**1** |

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com



www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

| | | |
|---|---|---|
| | 4. குழந்தை பிறப்பின்போது சுரக்கும் 'ரிலாக்ஸின்' போன்ற பல ஹார்மோன்களை உற்பத்தி செய்கிறது. | 1 (Total -3) |
| 17 | **மின்னணுக் கழிவுகளை மறுசுழற்சி செய்தல்:**<br>1. மின்னணுக் கழிவுகளை மறுசுழற்சி செய்தல் மற்றும் அகற்றுதல் வளர்ந்த நாடுகளில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் சமூகங்களின் உடல் நலத்திற்கு கணிசமான ஆபத்தை ஏற்படுத்தலாம்.<br>2. மறுசுழற்சியின் போது பாதுகாப்பற்ற முறையில் தம்மை வெளிப்படுத்திக்கொள்ளுதல் மற்றும் நிலக்குவிப்புகள் மற்றும் எரியூட்டி சாம்பல்களிலிருந்து கசியும் கன உலோகங்கள் போன்ற பொருட்கள் ஆகியவற்றை தவிர்க்க உயரளவு பாதுகாப்பினைமேற்கொள்ளவேண்டும். | 1<br>2<br>(Total-3) |
| 18 | **R - தேர்வு செய்த மற்றும் K - தேர்வு செய்த சிற்றினங்களுக்கிடையேஉள்ள வேறுபாடுகள்.** (see table below) | ஏதேனும் 3<br>(Total-3) |
| 19 கட்டாய வினா | 1. **PCR நிகழ்ச்சி:** பின்னோக்கிய படியெடுத்தல் PCR (RT – PCR : Reverse transcription PCR).<br>2. இச்செயல் முறையில், ரிவர்ஸ் டிரான்ஸ்கிரிப்டேஸ் எனும் நொதியைப் பயன்படுத்தி ஆர்.என்.ஏ மூலக்கூறுகள் (mRNA) நிரப்பு டி.என்.ஏ க்களாக (Complementary DNA) மாற்றப்படுகின்றன.<br>3. இவ்வாறு உருவான cDNA வானது PCR க்கு வார்ப்புரு டி.என்.ஏவாகப் பணிபுரிகிறது. | 1<br>1<br>1<br>(Total-3) |

| உயிரினத் திறன் அல்லது இனப்பெருக்கத் திறன் (r) r-தேர்வு செய்த சிற்றினங்கள் | தாங்கும் திறன் (k) k-தேர்வு செய்த சிற்றினங்கள் |
|---|---|
| சிறிய அளவிலான உயிரினங்கள் | பெரிய அளவிலான உயிரினங்கள் |
| அதிக சேய் உயிரிகளை உருவாக்கும் | குறைவான சேய் உயிரிகளை உருவாக்கும் |
| வேகமாக முதிர்ச்சியடையும் | தாமதமான முதிர்ச்சி மற்றும் பெற்றோர் பராமரிப்பு காணப்படும். |
| ஆயுட்காலம் குறைவு | ஆயுட்காலம் அதிகம் |
| ஒவ்வொரு உயிரினமும், வாழ்நாளில் ஒரு முறையோ அல்லது சில முறைகளோ மட்டுமே இனப்பெருக்கம் செய்யும். | தன் வாழ்நாளில் ஒன்றுக்கும் மேற்பட்ட முறை இனப்பெருக்கம் செய்யும். |
| ஒரு சில உயிரினங்கள் மட்டுமே முதிர்வயதை எட்டும் | பெரும்பாலான உயிரினங்கள் அதிக வாழ்நாளை எட்டும். |
| சுற்றுச்சூழல் நிலையற்றது, அடர்த்தி சாராதது | சுற்றுச்சூழல் நிலையானது, அடர்த்தி சார்ந்தது. |

www.Padasalai.Net

SECTION - 4

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளி 5 MARKS

| Q.NO | ANSWERS | MARKS |
|---|---|---|
| 20. (a) | **உயிரின பல்வகைத்தன்மையின் பாதுகாப்பின் பொதுவான உத்திகள்:**<br>1. அபாயத்திலுள்ள அனைத்து சிற்றினங்களையும் அடையாளம் கண்டு பாதுகாத்தல்.<br>2. பொருளதார முக்கியத்துவம் வாய்ந்த, உயிரிகளையும் அவற்றோடு தொடர்புடைய வன விலங்குகளையும் அடையாளம் கண்டு அவற்றை பாதுகாக்கப்பட்ட பகுதியில் பாதுகாத்தல்.<br>3. உணவு, இனப்பெருக்கம், பேணி வளர்த்தல், ஓய்விடம் ஆகியவற்றுக்கான வாழ்விடங்களில் மிக ஆபத்தான நிலையில் இருப்பவைகளை அடையாளம் கண்டு பாதுகாத்தல்.<br>4. நிலம், நீர் மற்றும் காற்று முதலியவற்றை முன்னுரிமை அடிப்படையில் பாதுகாத்தல்.<br>5. வன உயிரினங்களின் பாதுகாப்புச் சட்டம் அமல்படுத்தப்படுத்துதல். | 1<br>1<br>1<br>1<br>1<br>Total-5 |
| 20. (b) | **ஹார்டி - வீன்பெர்க் விதியின் ஊகங்கள்:**<br>**திடீர் மாற்றம் இன்மை:**<br>1. திடீர் மாற்றத்தின் காரணமாக புதிய அல்லீல் உருவாக்கம், மரபணு இரட்டிப்படைதல் அல்லது மரபணு நீக்கம் ஆகிய எதுவும் இல்லை.<br>**சீரற்ற இனச்சேர்க்கை:**<br>2. ஒவ்வொரு உயிரினமும் இனச்சேர்க்கையில் ஈடுபடுவதற்கான வாய்ப்பைப் பெறுகின்றன. குறிப்பிட்ட மரபணு ஆக்கத்திற்கு முக்கியத்துவம் தராமல் இவற்றுக்கிடையேயான இனச்சேர்க்கை சீரற்ற முறையில் உள்ளது.<br>**மரபணு ஓட்டம் இன்மை:**<br>3. இனக்கூட்டத்திலிருந்து தனிப்பட்ட உயிரினங்களோ அல்லது அவற்றின் இனச்செல்களோ உள்செல்கை (உள்ளேற்றம்) அல்லது வெளிச்செல்கை (வெளியேற்றம்) எதிலும் ஈடுபடுவது இல்லை.<br>**மிகப்பெரிய உயிரினத்தொகை:**<br>4. இனக்கூட்டத்தின் அளவு எல்லையற்றதாக இருக்கவேண்டும்.<br>**இயற்கைத் தேர்வு இன்மை:**<br>5. அனைத்து அல்லீல்களும், வாழவும், இனப்பெருக்கம் செய்யவும் தகுதியுடையவை. | 1<br>1<br>1<br>1<br>1<br>(Total-5) |

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

**21. (a)**

**போதை மருந்து வகைகள்.**

| **தொகுதி குழு (Group)** | **போதை மருந்துகள் (Drugs)** | **விளைவுகள் (Effects)** |
|---|---|---|
| கிளர்வூட்டிகள் (Stimulants) | ஆம்ஃபிடமைன்கள், கோகைன், நிக்கோட்டின் மற்றும் புகையிலை (Tobacco) | மூளையின் செயல்பாட்டைத் துரிதப்படுத்துகின்றன. |
| மன அழுத்தவூக்கிகள் (Depressants) | மது, பார்பிட்டுரேட்டுகள், அமைதியூக்கிகள் (Tranquilizers) | மூளையின் செயல்பாட்டைக் குறைக்கின்றன. |
| போதை மருந்து /வலி நிவாரணிகள் (Narcotic / Analgesics) | அபின் (Opium), மார்ஃபின | மத்திய நரம்பு மண்டலத்தின் மீது மன அழுத்தவூக்கியாக செயல்புரிகிறது. |
| மன மருட்சி மருந்துகள் (Hallucinogens) | லைசர்ஜிக் அமில டைஎத்தில் அமைடு(LSD) ஃபென்சைக்ளிடைன் (Phencyclidine) | ஒருவரின் பார்த்தல், கேட்டல் மற்றும் உணர்தல் வழியை சிதைக்கிறது. |
| கிளர்வூட்டிகள், மன அழுத்தவூக்கிகள் மற்றும் மன மருட்சி மருந்துகள். | மரிஜுவானா, கஞ்சா, சாரஸ் | மத்திய நரம்பு மண்டலத்தின் மீது மன அழுத்தவூக்கியாகவும் மற்றும் இரத்த ஓட்ட மண்டலத்தையும் பாதிக்கின்றன. |

**5 X 1 = 5 (Total-5)**

**21. (b)**

**உயிரிகளில் காணப்படும் பல்வேறு வகையான ஒருங்கிணைவு முறைகளை விவரி.**

**'சுய கருவுறுதல்' (Autogamy):**

1. ஒரு செல்லிலிருந்தோ அல்லது ஒரே உயிரியிலிருந்தோ உருவாகின்ற ஆண் மற்றும் பெண் இன செல்கள் இணைந்து கருமுட்டையை உருவாக்குகின்றன.
2. **எ.கா:** ஆக்டினோஸ்பேரியம் மற்றும் பாரமீசியம்.

**'அயல் கருவுறுதல்' (exogamy):**

1. ஆண் மற்றும் பெண் என்னும் இரு தனித்தனி பெற்றோர்களிலிருந்து உருவாகின்ற ஆண் மற்றும் பெண் இனச்செல்கள் ஒன்றிணைந்து கருமுட்டை உருவாகிறது.
2. **எ.கா:** மனிதனில் ஆண் பெண் என்னும் இரு தனித்தனி உயிரிகள் காணப்படுதல்.

**ஏதேனும் 5**
**5 x 1 = 5**
**(Total-5)**

**½ + ½ =1**

**½ + ½ =1**

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

| | | |
|---|---|---|
| | **'முழுச்சேர்க்கை' (Hologamy):**<br>1. - கீழ்நிலை உயிரிகளில், அவ்வயிரிகளே இனச் செல்கள் போன்று செயல்பட்டு ஒன்றிணைந்து புதிய உயிரிகளைத் தோற்றுவிக்கின்றன.<br>2. **எ.கா.** டிரைக்கோநிம்ஃபா (Trichonympha). | ½ + ½ =1 |
| | **இளம் செல் சேர்க்கை (Paedogamy):**<br>1. முதிர்ந்த பெற்றோர் செல்லிலிருந்து மறைமுகப்பிரிவு மூலம் உருவாகும் இரு இளம் சேய் செல்கள் இனச்செல்கள் போன்று செயல்பட்டு ஒன்றிணைந்து புதிய உயிரியைத் தோற்றுவிக்கும்.<br>2. **எ.கா.** ஆக்டினோபிரிஸ். | ½ + ½ =1 |
| | **மாறுபட்ட செல்சேர்க்கை (Merogamy):**<br>1. அமைப்பில் மாறுபட்ட இரு சிறிய இனச்செல்கள் ஒன்றிணையும் முறை.<br>2. **எ.கா.** புரோட்டோசோவா. | ½ + ½ =1 |
| | **ஒத்த செல் சேர்க்கை (Isogamy):**<br>1. அமைப்பிலும் செயலிலும் ஒரே மாதிரியான இரு இனச்செல்கள் ஒன்றிணைதல் 'ஒத்த செல் சேர்க்கை' எனப்படும்.<br>2. **எ.கா.** மோனோசிஸ்டிஸ். | ½ + ½ =1 |
| | **வேறுபட்ட செல் சேர்க்கை' (anisogamy):**<br>1. முற்றிலும் வேறுபட்ட இரு இனச் செல்கள் ஒன்றிணையும் முறை 'வேறுபட்ட செல் சேர்க்கை' (anisogamy) எனப்படும்.<br>2. **எ.கா.** உயர்வகை விலங்குகள். | ½ + ½ =1 |
| | **தயாரிப்பு:**<br>**பாரதிராஜா அ**<br>M.Sc., M.Phil., M.Ed., DOA<br>முதுகலை விலங்கியல் ஆசிரியர்,<br>**தே பிரித்தோ மேல்நிலைப்பள்ளி,**<br>**தேவகோட்டை.**<br>CELL: 9944277623. | |

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com